மார்க்கெட்டில் இதற்கான டெண்டர்கள் கோரப்பட்டபொழுது மிஷோஹிவாய் கம்பெனி, தாம் குறைந்த விலைக்குத் தருவதாக முன் வந்திருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. அது விரைவிலே முடிவு செய்யப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, அந்த ஜென ரேட்டர்களைப் பொறுத்தவரையில் Technical Evaluation Committee போடப்பட்டிருக்கிறதா? அதனுடைய அறிக்கை என்ன சொல்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சிப்காட் நிறுவனத்தில் இருக்கிற பொறியாளர்கள் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

வடஆற்காடு மாவட்டம் போளூரில் காகித தொழிற்சாலை.

351—(*வினா எண் 12510) திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம் போளூரில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் போளூரில் காகிதத் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. எஸ். பி. மணவாளன்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் வேறு எங்காவது காகிதத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா? வடாற்காடு மாவட்டத்தில் 3 சர்க்கரை ஆலைகளும், வடாற்காடு மாவட்டத்திற்கு அருகில் இரண்டு சர்க்கரை ஆலைகளும் ஆக மொத்தம் 5 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே, இனிமேலாவது வடாற்காடு மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். டிட்கோவிடம் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. 5 சர்க்கரை ஆலைகள் இருந்தால் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க முடியும். அந்த அடிப் படையில் இப்போது புகளூரில் அமைக்கப்பட்டு, நல்லமுறையில் நடந்து வருகிறது.

சென்னையில் நடமாடும் நீதிமன்றங்கள்.

352—(* வினா எண். 6158) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் குடிமையியல் வழக்குகளை (Civil Offences) விசாரிக்க இரு நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப் பெறும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஆம். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : தலைவரவர்களே, இன்றைக்கு சிடி சிவில் கோர்ட் ஒரே இடத்தில் இருப்பதால் இட நெருக்கடி ஏற்பட்டு, மக்களுடைய போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது, வழக்குகள்கூட ஒருசில சீனியர் வழக்கறிஞர்களிடம் குவிந்து இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே ஈஸ்ட், வெஸ்ட், நார்த் சௌத் சென்ட்ரல் என்று பிரித்து அந்தந்தப் பகுதிகளில் நீதிமன்றங்களை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, உயர்நீதிமன்றத்தோடு கலந்து இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க ஏற்கெனவே அரசு பரிசீலனை செய்துவருகிறது.